මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-011-2484500, (94)-011-2484600, (94)-011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: (94)-011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: PFD/RED/REG/02/CC/01/2021
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2021.05.12

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் தலைவர்கள்

**அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களின் வருடாந்த செயற்திறன் அறிக்கைகள் மற்றும் கணக்குகள்**

2018 இலக்கம் 19 தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (2) பிரிவிற்கு அமைவாக, தங்களால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வருடாந்த நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பிக்கும் போது வருடாந்த செயற்திறன் அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2020.08.28 திகதியிடப்பட்ட பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 10 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தமது நிறுவனம் மற்றும் தமக்குக் கீழ் காணப்படும் அனைத்து நிறுவனங்களும் 2020.12.31 உடன் முடிவடையும் நிதியாண்டிற்கான வருடாந்த கணக்குகளுடன் 2018 இலக்கம் 19 இன் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16 (2) இன் பிரகாரம் வருடாந்த செயற்திறன் அறிக்கையையும், மேலேயுள்ள சுற்றறிக்கை விதிகளின்படி பொதுக் கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 06 இன் படி 2021.02.28 இற்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்துள்ளதாக உத்தேசிக்கின்றேன்.

02. மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி தமது நிறுவனத்தால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறித்த அறிக்கைகளை சமர்ப்பித்திருப்பினும், நாட்டில் மீண்டும் பரவி வரும் COVID-19 உலகளாவிய தொற்றுநோய் காரணமாக, அரச நிறுவனங்களின் அன்றாட நடவடிக்கைகளில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான அதிகாரிகள் கடமையில் ஈடுபட்டுள்ளதால், பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 12 வது பந்தியின் விதிகளிற்கு அமைவாக, நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்கு முன்பதாக 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்திறன் அறிக்கையை

பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் அரச நிறுவனங்களிற்கு சிரமம் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்திறன் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் திகதி 2021.06.30 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகிறேன்.

ஒப்பம் / எஸ். ஆர். ஆட்டிகல
திறைசேரியின் செயலாளர்

பிரதிகள்:

01. ஜனாதிபதியின் செயலாளர்
02. பிரதமரின் செயலாளர்
03. அமைச்சரவைச் செயலாளர்
04. செயலாளர், அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சு
05. கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காய்வாளர் அலுவலகம்
06. தலைவர், நிதி ஆணைக் குழு